சுருக்கம்

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் – சான்றளிக்கப்பட்ட 20 சர்வோதய சங்கங்களுக்கு 2011–2012ஆம் ஆண்டுக்கான கதர் தள்ளுபடி மானியத் தொகை – ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை

அரசாணை (நிலை) எண். 222

நாள்: 7.10.2013
விஜய புரட்டாசி 21
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.194, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (எப்2) துறை, நாள் 11.9.2012.
2. அரசு ஆணை (நிலை) எண்.251, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள் 28.11.2012.
3. அரசு ஆணை (நிலை) எண்.45, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள் 6.3.2013.
4. அரசு ஆணை (நிலை) எண்.97, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள் 23.5.2013.
5. அரசு ஆணை (நிலை) எண்.134, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள் 17.6.2013.
6. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் எண்.7303/எம்3/2013, நாள் 10.07.2013.

-----

ஆணை:

மேலே ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில், சான்றளிக்கப்பட்ட 68 சர்வோதய சங்கங்களுக்கு 2010–2011ஆம் ஆண்டுக்கான கதர் தள்ளுபடி மானியத் தொகை ரூ.9,62,28,715/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சான்றளிக்கப்பட்ட 9 சர்வோதய சங்கங்களுக்கு 2011–2012ஆம் ஆண்டுக்கான கதர் தள்ளுபடி மானியத் தொகை ரூ.84,69,668/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர், 2011–2012ஆம் ஆண்டுக்கு தணிக்கை முடித்து பெறப்பட்ட 20 சர்வோதய சங்கங்களின் கதர் தள்ளுபடி மானியத் தொகை ரூ.2,12,44,982/–னை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. அச்செயற்குறிப்பினை அரசு ஏற்று, சான்றளிக்கப்பட்ட 20 சர்வோதய சங்கங்களுக்கு 2011–2012ஆம் ஆண்டுக்கான கதர் தள்ளுபடித் தொகையான ரூ.2,12,44,982/– (ரூபாய் இரண்டு கோடியே பன்னிரெண்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரெண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம், கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | |
|---|---|
| 2851 00 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் |
| 105 | கதர்-கிராமத் தொழில்கள் |
| I | திட்டத்தில் சேராதது |
| AM | சான்றளிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கு கதர்த் துணிகள் விற்பனை மீது தள்ளுபடி |
| 11 | மானியங்கள் |
| 02 | பொதுவான மானியம் |

(குதொகு 2851 00 105 AM 1126)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை விடுவித்து, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ்க்கண்ட தன்வைப்புக் கணக்கின் கீழ் செலுத்துமாறு கருவூலக் கணக்கு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:–

| | |
|---|---|
| K | வைப்பீடுகள் முன்பணங்கள் |
| (b) | வட்டிபெறா வைப்பீடுகள் |
| 8443 | உரிமையியல் வைப்பீடுகள் |
| 800 | ஏனைய வைப்பீடுகள் |
| BR | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வைப்பீடுகள் |

(குதொகு. 8443 00 800 BR 000C) வரவுகள்

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பணமாக வழங்கப்படாமல் காசோலையாக வழங்கப்பட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தன்வைப்புக் கணக்கு எண் NBI.A/C 6184513750–இல் வரவு வைக்கப்பட வேண்டும்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.53825/நிதி(தொழில்கள்)/2013–2, நாள் 03.10.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை–108.
மாநில கதராணையகம், கோபாலபுரம், சென்னை–86
மாநில கணக்காயர், (தணிக்கை–1) சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை–1) சென்னை–18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை–9
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு/ தெற்கு),
சென்னை–01/35.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர்,
807, அண்ணாசாலை, சென்னை–2.

நகல்

நிதி (தொழில்கள்) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்